The Central Government on March 12 launched a mobile app ‘Mera Ration’. This app will benefit especially those ration card holders who move to new areas for livelihoods. It can be used for identifying the nearest fair price shop, check details of their entitlement and recent

transactions. The android-based mobile application, developed by the National Informatics Centre (NIC).

---

4. தமிழகம் உள்பட 4 மாநிலங்களுக்கு கொரோனா தடுப்பூசிக்கான ‘பிரீசர் பாக்ஸ்' இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் வழங்கியது.

இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் தற்போது தமிழகம், பீகார், மணிப்பூர், காஷ்மீர் ஆகிய மாநிலங்களுக்கு கொரோனா தடுப்பூசிக்கான பிரீசர் பாக்ஸ்களை வழங்கி உள்ளது.

---

3.ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் நேற்று இரவு நடந்த இறுதி ஆட்டத்தில் மும்பை அணி 2-1 என்ற கோல் கணக்கில் ஏ.டி.கே. மோகன் பகானை வீழ்த்தி முதல்முறையாக கோப்பையை கைப்பற்றியது.

---

2.இந்திய மகளிர் கிரிக்கெட் அணி கேப்டன் மிதாலிராஜ் ஒரு நாள் போட்டியில் 7 ஆயிரம் ரன்களை எடுத்து சாதனை படைத்து உள்ளார்.

---

1.“பெங்களூரில் கட்டமைக்கப்பட்டுள்ள, 'ஏசி' வசதியுடன் கூடிய, நாட்டின் முதல் ரயில்வே முனையம், மிக விரைவில் செயல்பாட்டிற்கு வர உள்ளது,” என, ரயில்வே அமைச்சர் பியுஷ் கோயல் தெரிவித்தார்.

இந்தியாவின் புகழ்பெற்ற பொறியாளரான பாரத ரத்னா, எம்.விஸ்வேஸ்வரய்யாவின் பெயரில், பெங்களூரில் கட்டமைக்கப்பட்டுள்ள, 'ஏசி' வசதியுடன் கூடிய, நாட்டின் முதல் ரயில்வே முனையம், மிக விரைவில் செயல்பாட்டிற்கு வர உள்ளது.இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

---

# March-13

8. The BRICS Contact Group on Economic and Trade Issues (CGETI) leaders held their first meeting under India's Chairship from 9-11 March 2021. The theme of BRICS this year is - "BRICS@15: Intra BRICS Cooperation for Continuity, Consolidation, and Consensus".

பொருளாதாரம் மற்றும் வர்த்தக சிக்கல்கள் குறித்த பிரிக்ஸ் தொடர்பு குழு (CGETI) தலைவர்களின் முதல் சந்திப்பு மார்ச் 9-11 தேதிகளில் இந்தியாவின் தலைமையில் நடைபெற்றது. இந்த ஆண்டின் மையப்பொருள்: **"பிரிக்ஸ் @ 15**: தொடர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் ஒருமித்த கருத்துக்கு பிரிக்ஸ் நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பு ".

---

7. The Amrit Mahotsav is organised at the 75 locations for 75 weeks across the country to mark the 75 years of India's Independence from the British rule. The Prime Minister, Shri Narendra Modi flagged off the 'Padyatra' (Freedom March) from Sabarmati Ashram, Ahmedabad on March 12 and inaugurated the curtain raiser activities of the 'Azadi Ka Amrit Mahotsav' (India@75).

இந்தியாவின் 75-வது சுதந்திர தினம் 2022-ம் ஆண்டு ஆகஸ்டு 15-ந் தேதி வருகிறது. நமது நாட்டின் இந்த 75-வது சுதந்திர தினவிழா 'அம்ரித் மகோத்சவ்' என்ற பெயரில் 75 இடங்களில் 75 வாரங்கள் கொண்டாடப்படுகிறது. இதை பிரதமர் மோடி தொடங்கிவைத்தார். தண்டி யாத்திரையின் நினைவு தினமான மார்ச் 12 அன்று அதை நினைவு கூரும் வகையில் சபர்மதி ஆசிரமத்தில் இருந்து 81 பேர் தண்டிக்கு யாத்திரையாக புறப்பட்டனர். இதற்கு மத்திய கலாசார மற்றும் சுற்றுலா துறை மந்திரி பிரஹலாத்சிங் படேல் தலைமை தாங்கினார். இதை பிரதமர் மோடி கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.

---

6.The U.S. Consulate honoured Tamil Nadu based anti-caste activist and human rights defender Gowsalya Shankar with the International Woman of Courage (IWOC) Award in Chennai on March 11.

சென்னையில் செயல்பட்டு வரும் அமெரிக்க தூதரகம் தமிழகத்தைச் சேர்ந்த சாதி எதிர்ப்பு மற்றும் மனித உரிமை ஆர்வலர் **கௌசல்யா சங்கர்** அவர்களுக்கு மார்ச் 11 அன்று **சர்வதேச தைரியமான பெண்** (IWOC) விருது வழங்கி கௌரவித்துள்ளது.

---

5. The Indian Chess player Koneru Humpy from Andhra Pradesh has won the BBC Indian Sportswoman of the Year award (ISWOTY) for 2020, following a public vote.

மக்களின் அதிகப்படியான வாக்குகளைப்பெற்று, ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த இந்திய சதுரங்க வீராங்கனையான **கொனேரு ஹம்பி**, இந்த ஆண்டிற்கான பிபிசியின் சிறந்த இந்திய விளையாட்டு வீராங்கனை விருதைப் பெறுகிறார்.

---

4. ஓமனில் பொது மன்னிப்பு திட்டம் 31-ந் தேதியுடன் நிறைவடைகிறது. எனவே ஓமனில் சட்ட விரோதமாக தங்கியுள்ள இந்திய தொழிலாளர்கள் வெளியேற வேண்டும் என்று இந்திய தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

ஓமன் அரசின் தொழிலாளர் நலத்துறை ஓமன் நாட்டில் சட்ட விரோதமாக தங்கியுள்ள தொழிலாளர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கியுள்ளது. இந்த திட்டமானது கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 15-ந் தேதி அறிவிக்கப்பட்டது. இந்த திட்டத்தை பயன்படுத்தி டிசம்பர் மாத இறுதிக்குள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டது.பின்னர் இந்த திட்டமானது மார்ச் 31-ந் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை பயன்படுத்தி சட்ட விரோதமாக ஓமன் நாட்டில் தங்கியிருக்கும் இந்திய தொழிலாளர்கள் விரைவாக வெளியேற கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

---

3.துபாய் நகர மேம்பாட்டு திட்டம் 2040 தொடர்பான சுப்ரீம் கமிட்டியின் கூட்டம் துபாயில் march13 ல் நடந்தது. கூட்டத்துக்கு துபாய் ஆட்சியாளரும், அமீரக துணை அதிபரும், பிரதமருமான மேதகு ஷேக் முகம்மது பின் ராஷித் அல் மக்தூம் தலைமை வகித்தார். அப்போது அவர் துபாய் நகர மேம்பாட்டுத் திட்டம் 2040 தொடர்பான பணிகளுக்கு அனுமதியளித்து உத்தரவு பிறப்பித்தார்.

துபாய் நகர மேம்பாட்டுத் திட்டம் 2040 திட்டப்படி துபாய் நகரின் . மேலும் அடுத்த 20 ஆண்டுகளில் துபாய் நகரில் தற்போது இருந்து வரும் கடற்கரை

பகுதிகளை கூடுதலாக 400 சதவீத அளவுக்கு விரிவுப்படுத்தப்படும். இதன் மூலம் துபாய் நகரின் பொருளாதாரம் மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள் இரு மடங்காக மேம்படும்.

---

2.அமெரிக்காவைச் சேர்ந்த, 'டெவலப்மென்ட் பைனான்ஸ் கார்ப்பரேஷன் இந்திய நிறுவனத்திற்கு கொரோனா கொரோனா தடுப்பூசி மருந்து தயாரிப்பதற்கு நிதி உதவியை அளிப்பதாக தெரிவித்துள்ளது.

---

1. அமெரிக்காவில் குவாட் நாடுகள் கூட்டம் நடைபெற்றது. இதில் இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர். சீனாவை சாராமல் பொருளாதாரம், வர்த்தகம் உள்ளிட்டவற்றில் மேம்படுவதற்கான உருவாக்கப்பட்டது குவாட் நாடுகள் கூட்டணி. இந்த கூட்டத்தில் சீனாவால் மற்ற நாடுகளுக்கு ஏற்படும் சவால்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

நான்கு நாட்கள் நடைபெறும் இந்த குவாட் நாடுகள் கூட்டத்தில் இன்று அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சுல்லிவான் உரையாற்றினார்.இந்தோ-பசிபிக் பகுதியில் உள்ள பிரச்னைகளை களைய இந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

# March-12

10. The Supreme Court on **March 12** held that independent persons and not bureaucrats should be appointed State Election Commissioners.

மத்திய, மாநிலங்கள் சார்ந்த அரசாங்க அதிகாரிகளை மாநில தேர்தல் ஆணையர்களாக நியமிக்க கூடாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

---

9. இந்திய சுதந்திர தினத்தின் 75-வது ஆண்டு நிறைவு விழா 15.8.2022 அன்று கொண்டாடப்படுகிறது. அதற்கு முந்தைய 75 வாரங்களுக்கு சுதந்திர தின சிறப்பு நிகழ்ச்சிகளை விமரிசையாக கொண்டாடும்படி மத்திய அரசு அனைத்து மாநில அரசுகளுக்கும் உத்தரவிட்டு உள்ளது. 75-வது ஆண்டு சுதந்திர தின தொடக்க விழாவை முன்னிட்டு படகு மற்றும் சைக்கிள் ஊர்வலத்தை கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் தொடங்கி வைத்தார்.

---

8.தமிழ் எழுத்தாளர் இமயம் எழுதிய 'செல்லாத பணம்' என்ற நாவலுக்கு சாகித்ய அகாடமி விருது அறிவிக்கப்பட்டுள்ளது.இலக்கிய உலகில் உயரிய அங்கீகாரமாக கருதப்படும் இந்த சாகித்ய அகாடமி விருது, கடந்த 1955 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்படுகிறது. விருது பெறுபவர்களுக்கு தாமிர பட்டயம் மற்றும் ஒரு லட்சம் ரூபாய் பரிசு வழங்கப்படும்.

அந்த வகையில் கடந்த 2020 ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருதுகள் இன்று அறிவிக்கப்பட்டுள்ளன. இதில், தமிழகத்தைச் சேர்ந்த எழுத்தாளர் இமயம் எழுதிய 'செல்லாத பணம்' என்ற நாவலுக்கு சாகித்திய அகாடமி விருது அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல், சாகித்திய அகாடமியின் 'யுவ புஸ்கர்' விருது மர நாய் என்ற கவிதை தொகுப்பை எழுதிய எழுத்தாளர் சக்திக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

'கோவேறு கழுதைகள்' என்ற தனது முதல் நாவல் மூலம் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகமானவர் எழுத்தாளர் இமயம். இவரது இயற்பெயர் வெ.அண்ணாமலை ஆகும். இவர் கடலூர் மாவட்டம், திட்டக்குடி அருகே கழுதூரில் பிறந்தவர் ஆவார்.

---

7.அஸ்ட்ரா ஜெனகா மருந்துக்கு டென்மார்க் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் தற்காலிக தடை

இங்கிலாந்தைச் சேர்ந்த மருந்து நிறுவனமான 'அஸ்ட்ரா ஜெனகா' தயாரித்துள்ள கொரோனா தடுப்பு மருந்தானது, பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த மருந்தை செலுத்திக்

கொண்டவர்களில் சிலருக்கு ரத்தம் உறையும் தன்மை ஏற்படுவதாக புகார்கள் எழுந்தன.

ஆஸ்திரியா நிறுத்திக் கொண்டது. இதுதவிர எஸ்டானியா, லட்வியா, லித்வானியா, லக்சம்பர்க் ஆகிய நாடுகளும் அஸ்ட்ரா ஜெனிக்கா தடுப்பு மருந்தை பயன்படுத்துவதை நிறுத்திக் கொண்டன.தற்போது டென்மார்க்கிலும் இந்த மருந்துக்கு தடைவிதிக்கப்பட்டது.

---

6.இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் கேப்டன் மிதாலிராஜ் சர்வதேச போட்டிகளில் 10 ஆயிரம் ரன்களை கடந்து சாதனை படைத்து உள்ளார்.

---

5.குவாட்' எனப்படும், அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகிய, நான்கு நாடுகளின் கூட்டமைப்பின், தலைவர்கள் மாநாடு, இன்று துவங்கியது. அமெரிக்க அதிபர், ஜோ பைடன் , பிரதமர், நரேந்திர மோடி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

கடந்த 2007ல், உருவானது, குவாட் அமைப்பு. இதுவரை, வெளியுறவு அமைச்சர்கள், அதிகாரிகள் அளவில், பல்வேறு பிரச்னைகளுக்காக குவாட் மாநாடு நடந்துள்ளது.முதல் முறையாக, இந்த நான்கு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் மாநாடு, .'வீடியோ கான்பரன்ஸ்' முறையில் இன்று துவங்கியது.இம்மாநாட்டில் கொரோனாவுக்கு பிந்தைய நிலை மற்றும் தடுப்பூசி மருந்து உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து விவாதம் நடக்கிறது.

---

4. 2021-ல் உலகளவில் அதிக செல்வம் ஈட்டிய நபர்களில் அமேசானின் ஜெப் பெசோஸ், டெஸ்லாவின் எலான் மஸ்க் ஆகியோரை பின்னுக்கு தள்ளி இந்தியாவின் முதல் தலைமுறை தொழிலதிபரான அதானி முதலிடம் பிடித்துள்ளார்.

---

3. சாகித்ய அகாதமி இந்திய அரசினால், மார்ச் 12, 1954 இல் துவக்கப்பட்ட ஓர் அமைப்பு.

சிறந்த இந்திய இலக்கிய படைப்பாளிகளுக்கு, இந்திய அரசால் ஒவ்வோர் ஆண்டும் தேசிய அளவிலும் மாநில அளவிலும் வழங்கப்படும் மதிப்பிற்குரிய விருதாகும். பரிசுத்தொகையாக 1,00,000 ரூபாயும், ஒரு பட்டயமும் வழங்கப்படுகின்றன. இருபத்து நான்கு இந்திய மொழிகளில் சிறுகதை, நாவல், இலக்கிய விமர்சனம் போன்ற பலவகையான எழுத்தாக்கங்களிற்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

---

2.அருணாசல பிரதேச எல்லை அருகே உள்ள பிரம்மபுத்திரா நதியில் அணையைக் கட்டுவதற்கு சீன நாடாளுமன்றம் ஒப்புதல் வழங்கி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

---

1. நாட்டின் 75வது சுதந்திர தினக் கொண்டாட்டத்தை இன்று (12-3-2021) குஜராத்தின் சபர்மதி ஆசிரமத்தில் நடக்கும் நிகழ்ச்சியில், பிரதமர் மோடி துவக்கி வைக்கிறார்.

## March-11 | Online Exam-Click Here

7. இந்திய கால்பந்து அணியின் கேப்டன் **சுனில் சேத்ரி**க்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

---

6.போலியான சலுகைகளை வழங்கிக் கொண்டிருந்த சுமார் 184 சீன இணையதளங்களுக்கு சவுதி அரசு தடை விதித்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

---

5.ஏ.ஆர். ரஹ்மான் கதை எழுதி, இசையமைத்து தயாரித்த 99 ஸாங்ஸ் படம் ஏப்ரல் 16 அன்று வெளியாகிறது.

---

4. சென்னை மாவட்ட கைப்பந்து சங்கம் சார்பில் டாக்டர் ரேலா மருத்துவ மையம் மற்றும் ஆச்சி குரூப் நிறுவனங்கள் ஆதரவுடன் ‘ஏ’ டிவிசன் கைப்பந்து லீக் சாம்பியன்ஷிப் போட்டி எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் நடந்தது. இந்த போட்டியில் கடைசி நாளான நேற்று நடந்த லீக் ஆட்டம் ஒன்றில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி (ஐ.ஓ.பி.) எஸ்.ஆர்.எம். அணியை வீழ்த்தியது.

---

3.கொரோனா தடுப்பூசிகள் வழங்கியதற்காக இந்தியா மற்றும் பிரதமர் மோடிக்கு நன்றி தெரிவித்து கனடாவில் பெயர் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன.

---

2. குவாட்' எனப்படும், அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகிய, நான்கு நாடுகளின் கூட்டமைப்பின், தலைவர்கள் மாநாடு, 12/3/2021 நடக்கிறது. இதில், அமெரிக்க அதிபர், ஜோ பைடன் உள்ளிட்டோருடன், நம் பிரதமர், நரேந்திர மோடி பங்கேற்கிறார்.

---

**1.**நாட்டில், அதிக கட்டுமான செலவு கொண்ட நகரமாக, மும்பை உள்ளதாகவும்; குறைவான கட்டுமான செலவு கொண்ட நகரமாக, சென்னை இருப்பதாகவும், ஆய்வறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது.

# March-10 | Online Exam -Click Here

14.The HDFC Bank has launched the “SmartUp Unnati mentoring Programme”. This programme was launched to provide its support to the women entrepreneurs. This programme was launched on the occasion of International Women’s Day.

HDFC வங்கி "ஸ்மார்ட்அப் உன்னதி வழிகாட்டல் திட்டம்" என்ற ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த திட்டம் பெண் தொழில்முனைவோருக்கு உதவுவதற்காக தொடங்கப்பட்டதாகும். சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இந்த திட்டம் தொடங்கப்பட்டது.

---

13.Indian Railways has launched an integrated "Rail Madad Helpline number 139". This helpline number can be used for all types of queries, assistance and complaints for passengers during the travel.

இந்தியன் ரயில்வே, ஒருங்கிணைந்த "ரயில் மதத் ஹெல்ப்லைன் எண் 139"ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. பயணத்தின் போது பயணிகளுக்கான அனைத்து வகையான உதவிகள் மற்றும் புகார்களுக்கு இந்த ஹெல்ப்லைன் எண்ணைப் பயன்படுத்தலாம்.

---

12.The Defense Research & Development Organization (DRDO) on March 8, 2021 conducted the final development test of the "Air Independent Propulsion (AIP)".

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) மார்ச் 8, 2021 அன்று "ஏர் இன்டிபென்டன்ட் ப்ரபல்ஷன் (AIP)" தொழில்நுட்பத்தின் இறுதி மேம்பாட்டு சோதனையை நடத்தியது.

---

11.On the occasion of International Women's Day, Andhra Pradesh Chief Minister Y S Jagan Mohan Reddy has announced that the state would introduce a gender budget in the ensuing Budget session of the Assembly. Andhra Pradesh will be the first in the country to come up with the Gender Budget concept.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, ஆந்திர மாநில முதலமைச்சர் Y.S. ஜெகன் மோகன் ரெட்டி அவர்கள், சட்டமன்றத்தின் அடுத்த பட்ஜெட் கூட்டத்தொடரில் பாலின நிதிநிலை அறிக்கையை அறிமுகப்படுத்துவதாக அறிவித்துள்ளார். இந்தியாவில் பாலின நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்யும் முதல் மாநிலம் ஆந்திரா ஆகும்.

---

10.The Ministry of Home Affairs (MHA) informed the Lok Sabha on March 9 that a "cyber volunteer" programme has been rolled out for "cyber hygiene promotion" and the services of volunteers would be utilised by the State police as per requirement. The MHA, through its cyber crime grievance portal cybercrime.gov.in, aims to raise a group of "cyber crime volunteers" to flag "unlawful content" on the Internet.

சட்ட விரோத, தீவிரவாத, மற்றும் தேசவிரோத நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட பிரச்சாரங்கள், செய்திகள், பொருளடக்கங்கள், கருத்துகள் ஆகியவற்றை கண்டுப்பிடிக்க சைபர் தன்னார்வலர்களாக குடிமக்களையே மாற்றும் 'சைபர் தன்னார்வலர்கள் திட்டம்' என்கிற ஒன்றை மத்திய உள்துறை அமைச்சகத்தின் சைபர் கிரைம் பிரிவு உருவாக்கியுள்ளது. இந்த தன்னார்வலர்களின் சேவைகளை மாநில காவல்துறையினர் தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

9.Australia has suspended its defence cooperation with Myanmar and is redirecting humanitarian aid because of the military takeover of the government and ongoing detention of an Australian citizen.

மியான்மர் அரசாங்கத்தை இராணுவம் கையகப்படுத்தியதன் விளைவாக ஆஸ்திரேலியா மியான்மருடனான தனது பாதுகாப்பு ஒத்துழைப்பை நிறுத்தி வைக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

---

8.The Heritage Foundation, a US Conservative think-tank, recently launched the "Economic Freedom Index". In the index, Singapore has topped the global ranking for the second consecutive year.

அமெரிக்க சிந்தனைக் குழுவான ஹெரிடேஜ் அறக்கட்டளை சமீபத்தில் "பொருளாதார சுதந்திரக் குறியீட்டை" வெளியிட்டுள்ளது. குறியீட்டின் உலக தரவரிசையில் சிங்கப்பூர் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக முதலிடத்தில் உள்ளது.

---

7.The first ever summit of the leaders of the Quadrilateral Framework or ‘Quad’ will take place virtually on March 12, the Ministry of External Affairs announced on March 9. United States, Japan India and Australia comprise the Quadrilateral Framework.

QUAD கட்டமைப்பு தலைவர்களின் முதல் உச்சிமாநாடு மார்ச் 12 அன்று இணைய வழியில் நடைபெறவுள்ளதாக வெளிவிவகாரத்துறை அமைச்சகம் மார்ச் 9 அன்று அறிவித்துள்ளது. அமெரிக்கா, ஜப்பான்,இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா ஆகியவை இந்த QUAD அமைப்பின் உறுப்பினர்கள் ஆகும்.

---

6. ஐசிசியின் 20 ஓவர் கிரிக்கெட், சிறந்த அணிகளுக்கான தரவரிசையில் இந்திய அணி 2 - ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளது.  இந்தியா, டெஸ்ட் தரவரிசையில்  முதல் இடத்திலும், ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான தரவரிசையில் 2- ஆம் இடத்திலும்  உள்ளது.

---

5. இலங்கையின் கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனைய முதலீடு திட்டம் குறித்து, அதானி நிறுவனத்துடன் இலங்கை அரசு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது .

---

4. உத்தரகண்ட் முதல்வராக பா.ஜ., எம்.பி., திரத் சிங் ராவத் பதவியேற்றார்.திரத்

---

3. பஞ்சாபில் அரசு பஸ்களில் பெண்கள் இலவசமாக பயணம் செய்யலாம்," என, முதல்வர் அமரீந்தர் சிங் தெரிவித்துள்ளார்.

---

2. இந்திய விண்வெளி ஆய்வு மையமான இஸ்ரோ, பூமியின் மேற்பகுதியை மிகத் துல்லியமாக படம் பிடிக்கும் திறன் உள்ள, '**எஸ்.ஏ.ஆர்., ரேடார்**' சாதனத்தை தயாரித்துள்ளது.

இஸ்ரோ, அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான, நாசாவுடன் இணைந்து, முதன் முறையாக, 'நிசார்' என்ற செயற்கைகோளை, அடுத்த ஆண்டு விண்ணில் செலுத்த உள்ளது. இதில், முதன் முறையாக, வெவ்வேறு அலைவரிசை திறன் உள்ள, 'எல் பேண்டு மற்றும் எஸ் பேண்டு' ரேடார்கள் பொருத்தப்பட உள்ளன.

---

1.ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் கடந்த ஆண்டு நடக்க இருந்த ஒலிம்பிக் போட்டி கொரோனா பரவலால் இந்த ஆண்டுக்கு தள்ளிவைக்கப்பட்டது. பின்னர் வருகிற ஜூலை 23ந்தேதி தொடங்கி ஆகஸ்டு 8ந்தேதி வரை நடக்க உள்ளது என அறிவிக்கப்பட்டது. பாராலிம்பிக் போட்டிகள் ஆகஸ்டு 24ந்தேதி தொடங்கி செப்டம்பர் 5ந்தேதி வரை நடைபெறும். கொரோனா வைரசை கட்டுப்படுத்துவதற்காக வெளிநாட்டு பார்வையாளர்கள் இன்றி டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற உள்ளன.

---

## March-09 | Online Exam -Click Here

12. இந்தியா(திரிபுரா)-பங்களாதேஷ் எல்லையில் பாயும் ஃபெனி ஆற்றின் மீது கட்டப்பட்டுள்ள ‘மைத்ரி சேது’ என்கிற பாலத்தை பிரதமர் மோடி அவர்கள் மார்ச் 9 அன்று காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார். இந்தியாவின் தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் (NHIDCL) கட்டிய 1.9 கி.மீ நீளமுள்ள இந்த பாலம், பங்களாதேஷின் ராம்கரையும் இந்தியாவின் சப்ரூமையைம் இணைக்கிறது.

The PM will inaugurate the ‘Maitri Setu’, which has been built over Feni river flowing between Indian boundary in Tripura and Bangladesh, on March 9 via video conferencing. The 1.9 km long bridge, constructed by the National Highways and Infrastructure Development Corporation Ltd (NHIDCL), joins Sabroom in India with Ramgarh in Bangladesh.

---

11. இந்திய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் March 7ஆம் தேதி மத்திய பிரதேசத்தில் சிங்கோர்கர் கோட்டையின் பாதுகாப்பு பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். புதிதாக உருவாக்கப்பட்ட இந்திய தொல்பொருள் ஆய்வின் ஜபல்பூர் வட்டத்தையும் குடியரசுத் தலைவர் திறந்து வைத்தார். (The President of India Shri Ram Nath Kovind laid the foundation stone for the conservation works of Singorgarh Fort in Singrampur village of Damoh district in Madhya Pradesh on March 7. The President also inaugurated the newly carved Jabalpur Circle of Archaeological Survey of India.)

10.பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் அதன் அனைத்து முக்கிய திட்டங்களையும் வகைப்படுத்தி மிஷன் போஷன் 2.0, மிஷன் வத்சால்யா மற்றும் மிஷன் சக்தி ஆகிய மூன்று பெரிய திட்டங்களின் கீழ் அறிவித்துள்ளது.(The Ministry of Women and Child Development has announced to classify all the major schemes of the ministry under the three Umbrella schemes namely, Mission Poshan 2.0, Mission Vatsalya and Mission Shakti.)

---

9. இந்தியாவின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கும் குறியீடான நிலையான மேம்பாட்டு இலக்குகள் (SDG) குறியீட்டின் மூன்றாவது பதிப்பு மார்ச் 10 ஆம் தேதி நிதி ஆயோக் அறிமுகப்படுத்தவுள்ளது. இந்த குறியீடு முதன் முதலில் டிசம்பர் 2018 இல் தொடங்கப்பட்டது. (3rd edition of India’s Sustainable Development Goals (SDG) Index will be launched by NITI Aayog on 10 March 2021. First launched in December 2018, the index has become the primary tool for monitoring progress on the SDGs in the country.)

---

8.கர்னல் ஜான் பென்னிகுயிக் நினைவு நாள் March-9: விவசாயிகள் அஞ்சலி

தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் என்னும் 5 மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தில் மறுமலர்ச்சி ஏற்படுத்திய முல்லைப்பெரியாறு அணையைக் கட்டிய கர்னல் ஜான் பென்னி குயிக்கின் 110ஆவது நினைவு நாளான இன்று (மாரச்-9) விவசாயிகள் அஞ்சலி செலுத்தினர்.

---

7. சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் தங்கப்பதக்கத்தை கைப்பற்றினார், மனிஷ் கவுசிக்

இந்திய வீரர் மனிஷ் கவுசிக் 3-2 என்ற கணக்கில் டென்மார்க்கின் நிகோலாய் தெர்ட்யானை வீழ்த்தி தங்கப்பதக்கத்தை கைப்பற்றினார்.

பாக்சம் சர்வதேச குத்துச்சண்டை போட்டி ஸ்பெயின் நாட்டில் உள்ள கேஸ்டில்லோனில் நடந்தது.

---

6. உலக டென்னிஸ் ஒற்றையர் தரவரிசையில் முதலிடத்தில் அதிக வாரங்கள் இருந்த ரோஜர் பெடரரின் சாதனையை ஜோகோவிச் முறியடித்தார்.

48 ஆண்டு கால உலக தரவரிசை வரலாற்றில் இதற்கு முன்பு 39 வயதான சுவிட்சர்லாந்து வீரர் ரோஜர் பெடரர் மொத்தம் 310 வாரங்கள் முதலிடத்தில் இருந்ததே சாதனையாக இருந்தது. அந்த சாதனையை ஜோகோவிச் நேற்று தகர்த்தார்.

---

5. ம.பி.,யில் மத மாற்றத்தில் ஈடுபட்டால் 10 ஆண்டு சிறை; மத சுதந்திர சட்ட மசோதா நிறைவேற்றம்

இந்த சட்டத்தின்படி, ஒருவர் மதம் மாற விரும்பினால் 60 நாட்களுக்கு முன்பாக கலெக்டரிடம் விண்ணப்பிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட மத போதகரும் 60 நாட்களுக்கு முன்பு மாவட்ட நிர்வாகத்திடம் தகவல் தெரிவிக்க வேண்டும்.
ஒன்றுக்கும் மேற்பட்டோரை கட்டாயப்படுத்தியோ, ஏமாற்றியோ மதமாற்றம் செய்தால் 10 ஆண்டுகள் வரை சிறை தண்டனையும் ரூ.1 லட்சம் வரை மதமாற்ற திருமணங்கள் ரத்து செய்யப்படும் உள்ளிட்ட பல அம்சங்கள் இந்த சட்டத்தில் இடம்பெற்றுள்ளன.

---

4. வங்க தேசத்தின் 50வது சுதந்திர தின விழாவில் பிரதமர் மோடி பங்கேற்க உள்ளார். இதற்காக அவர் வரும் 26ம் தேதி வங்கதேசம் செல்ல உள்ளார்.

1971ல் கிழக்கு பாகிஸ்தான் பிரிந்து வங்கதேசமாக உருவானது. இதன் 50வது ஆண்டு விழா வங்கதேசத்தில் கொண்டாடப் பட உள்ளது.வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா - மோடி பேச்சுக்குப் பின் இருவரும் தாஹா - மேற்கு வங்கம் நியூ ஜல்பைகுரி இடையிலான பயணியர் ரயில் சேவையை துவக்கி வைக்க உள்ளனர்.

---

3. துப்பாக்கி சுடுதலில் தங்கம் வென்ற தமிழக நடிகர் - அஜித் குமார்

மாநில அளவில் நடந்த துப்பாக்கி சுடுதல் போட்டியில் கலந்து கொண்டு 6 பதக்கம் வென்று அசத்தி உள்ளார். தமிழக அளவிலான 46வது துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிங் போட்டியில் 10 மீட்டர் பிஸ்டல் பிரிவில் அஜித் தங்கம் வென்றுள்ளார்.

Actor Ajith Kumar has won six medals, including four gold, while representing the Chennai Rifle Club at the 46th Tamil Nadu State Shooting Championship held in Chennai.

---

2. சர்வதேச மல்யுத்தம்: இந்திய வீரர் பஜ்ரங் பூனியா தங்கம் வென்றார்.

ஆண்களுக்கான 65 கிலோ எடைபிரிவின் இறுதிப்போட்டியில் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றுள்ள இந்திய வீரர் பஜ்ரங் பூனியா, மங்கோலியாவின் துல்கா துமுர் ஒசிரை எதிர்கொண்டார். விறுவிறுப்பான இந்த போட்டியில் 0-2 என்ற புள்ளி கணக்கில் பின்தங்கி இருந்த பஜ்ரங் பூனியா கடைசி 30 வினாடி இருக்கையில் எதிராளியை மடக்கி 2 புள்ளிகள் எடுத்ததுடன் தங்கப்பதக்கத்தையும் தனதாக்கினார்.

ரேங்கிங் சீரிஸ் சர்வதேச மல்யுத்த போட்டி இத்தாலி தலைநகர் ரோமில் நடந்தது.

---

1. உலகத்தின் கொரோனா தடுப்பூசிகளுக்கான உற்பத்தி மையம் இந்தியாதான் என ஐ.எம்.எப் பொருளாதார நிபுணர்(IMF chief economist) கீதா கோபிநாத் புகழாரம் சூட்டியுள்ளார்.

---

# March 08 | Online Exam -Click Here

3. "சர்வதேச மகளிர் தினத்தை" முன்னிட்டு மார்ச் 8, 2021 அன்று கூகிள் (Google) நிறுவனம் இந்தியாவில் உள்ள கிராமப்புற பெண்களுக்கு உதவும் வகையில் 'பெண்கள் விருப்பம்' என்ற புதிய வலைதளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. (Google has launched a new web platform 'Women Will' on March 8, 2021 on the occasion of "International Women's Day". This platform will provide its support to 1 million rural women in India.)

---

2. ஐசிசியின் பிப்ரவரி மாதத்துக்கான சிறந்த வீரராக அஸ்வின் தேர்வு

---

1. சர்வதேச மகளிர்தினம் ஆண்டுதோறும் -மார்ச் 8 அன்று கொண்டாடப்படுகிறது. மையப்பொருள்- "**தலைமைத்துவ பெண்கள்: கோவிட் -19 உலகில் சமமான எதிர்காலத்தை அடைதல்" ஆகும்.**

The International Women's Day is observed on March 8 every year across the world. The day is being observed this year under the theme – "Women in leadership: Achieving an equal future in a COVID-19 world."

# MARCH-05 | Online Exam -Click Here

1.The Election Commission of India (EC) on March 4 informed the Madras High Court that it had uploaded on the website http://www.elections.tn.gov.in an updated list of names, designations, mobile phone numbers, landline numbers and e-mail IDs of Returning Officers (ROs) and Assistant Returning Officers (AROs) of as many as 230 out of 234 Assembly constituencies in the State.

தமிழக சட்டமன்ற தேர்தலை நடத்துவதற்காக, 234-இல் 230 சட்டமன்ற தொகுதிகளுக்கான மாவட்ட தேர்தல் அதிகாரிகள், தொகுதி தேர்தல்

அதிகாரிகள் மற்றும் உதவி தேர்தல் அதிகாரிகளை நியமித்து அவர்களின் முகவரி, கைபேசி எண், வாட்ஸ் ஆப் எண், மின்னஞ்சல் முகவரி என்பன போன்ற தொடர்பு விவரங்களை உள்ளடக்கிய புதிய பட்டியலை வெளியிட்டுள்ளதாக சென்னை ஐகோர்ட்டில் தேர்தல் ஆணையம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2.Chennai has secured the fourth rank in the ease of living among 49 cities in the million-plus category, according to a report on the Municipal Performance and Ease of Living Indices, 2020, issued by the Union Ministry of Housing and Urban Affairs. The city stood 14th in the previous survey.

இந்திய நகரங்கள் தொடர்பான வாழ்க்கை வசதிக் குறியீடு, நகர நிர்வாக செயல்பாட்டுக் குறியீடு ஆகியவற்றை இந்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற நிர்வாக அமைச்சகம் பிப்ரவரி 04 அன்று வெளியிட்டது. 10 லட்சத்துக்கு மேல் மக்கள் தொகை கொண்ட 49 நகரங்களில் சென்னை (62.61) நான்காவது இடத்தை பிடித்துள்ளது. கடந்த முறை வெளியிட்ட குறியீட்டில் சென்னை பதிநான்காவது இடத்தை பிடித்தது குறிப்பிடத்தக்கது.

3.Chennai ranks 18th, Coimbatore 12th and Madurai 22nd in the municipal performance index, which measures governance, planning, technology, finance and services.

10 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் வாழும் நகராட்சிகளின் நகர நிர்வாக செயல்பாட்டுக் குறியீட்டில் சென்னை 18-வது இடத்தையும், கோவை 12-வது இடத்தையும், மதுரை 22-வது இடத்தையும் பிடித்திருக்கின்றன.

4.The Office of Principal Scientific Adviser of the Government of India has launched the "Swachhta Saarthi Fellowship" under the "Waste to Wealth" Mission on March 3, 2021.

இந்திய அரசாங்கத்தின் முதன்மை அறிவியல் ஆலோசகர் அலுவலகம் மார்ச் 3 ஆம் தேதி "கழிவில் இருந்து செல்வம்" திட்டத்தின் கீழ் "ஸ்வச்த்தா சார்த்தி பெல்லோஷிப்"- ஐ தொடங்கியுள்ளது.

5.Six-time world champion boxer Mary Kom has been appointed as the Chairperson of the International Boxing Association's (AIBA) champions and veterans committee.

ஆறு முறை உலக சாம்பியன் பட்டம் வென்ற மேரி கோம் சர்வதேச குத்துச்சண்டை சாம்பியன்கள் கமிட்டியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

6.Telecom Equipment Export Promotion Council (TEPC) is organising 'India Telecom 2021' – an Exclusive International Business Expo virtually on March 3 & 4, 2021 under Market Access Initiative Scheme (MAI) of Department of Commerce, Government of India and with support of Department of Telecommunications & Ministry of External Affairs.

வர்த்தகத் துறையின் சந்தை அணுகல் முன்முயற்சி திட்டத்தின் (MAI) கீழ் டெலிகாம் கருவி ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சில் (TEPC) தொலைத்தொடர்பு மற்றும் வெளிவிவகாரத்துறை அமைச்சகத்துடன் இணைந்து 'இந்தியா டெலிகாம் 2021' என்கிற பிரத்யேக சர்வதேச வர்த்தக கண்காட்சியை மார்ச் 3 & 4, 2021 தேதிகளில் ஏற்பாடு செய்தது.

7.Dr Harsh Vardhan has exhorted scientists of CSIR laboratories across the country to develop the land available at each laboratory to be set up as a model under the "CSIR Floriculture Mission".

"சி.எஸ்.ஐ.ஆர் மலர் வளர்ப்பு மிஷன்" இன் கீழ் ஒவ்வொரு ஆய்வகத்திலும் நிலத்தை ஒதுக்கி அபிவிருத்தி செய்யுமாறு நாடு முழுவதும் உள்ள சி.எஸ்.ஐ.ஆர் ஆய்வகங்களின் விஞ்ஞானிகளை டாக்டர் ஹர்ஷ் வர்தன் அறிவுறுத்தியுள்ளார்.

8.Chabahar Day was commemorated on the sidelines of the Second edition of International Maritime Summit-2021 in the virtual format.

இணையவழி சர்வதேச கடல்சார் உச்சி மாநாடு -2021 இன் இரண்டாம் பதிப்பின் போது சாபஹார் தினம் நினைவுகூரப்பட்டது.

---

# MARCH-04 Online Exam -Click Here

1.வாழ எளிதான நகரங்கள் - சென்னைக்கு 4ம் இடம்: 7வது இடத்தில் கோவை

பத்து லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நகரங்களில், 1- பெங்களூரு , 2- புனே, 3- ஆமதாபாத், 4 - சென்னை, 5 - சூரத், 6- நவி மும்பை, 7- கோவை, 8 - வதோதரா, 9- இந்தூர், 10- கிரேட்டர் மும்பை ,கடைசி இடம் 49- ஸ்ரீநகர்.

**இதேபோல், 10 லட்சத்திற்கு கீழ் குறைவாக வசிக்கும் மக்கள் தொகை கொண்ட நகரங்களில் மக்கள் எளிதாக வாழ தகுதி வாய்ந்த நகரங்கள் பட்டியல் (சேலம் -5வது இடம், வேலூர்-6 வது இடம்,**

1- ஷிம்லா, 2- புவனேஸ்வர், 3- சில்வாசா, 4- காக்கிநாடா, 5 - சேலம், 6- வேலூர், 7-காந்திநகர், 8- குருகிராம், 9- தேவங்ரே, 10 - திருச்சி

**10 லட்சத்திற்கும் அதிகம் மக்கள் தொகை கொண்ட உள்ளாட்சி அமைப்புகளில், மக்கள் வாழ சிறந்த மாநகராட்சிகள் பட்டியல்**

1- புதுடில்லி, 2- திருப்பதி, 3- காந்திநகர், 4-கர்னல், 5 - சேலம், 6- திருப்பூர், 7- பிலாஸ்பூர், 8-உதய்ப்பூர், 9- ஜான்சி, 10- திருநெல்வேலி

---

1.The Director General of Income Tax (Investigation) has opened a 24×7 control room to receive complaints or information from the public ahead of the Assembly election scheduled in TamilNadu and Puducherry for April 6. The public can dial the toll free number 1800 425 6669 or fax 04428271915 or email itcontrol.chn@gov.in or WhatsApp 94453 94453.

வரும் ஏப்ரல் 6 ஆம் தேதி தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் சட்டமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் பொதுமக்களிடமிருந்து புகார்கள் மற்றும் தகவல்களைப் பெற வருமான வரி இயக்குநர் ஜெனரல் (விசாரணை) அவர்கள் 24×7 கட்டுப்பாட்டு அறையைத் திறந்துள்ளார். இதற்கு பொதுமக்கள் தகவல்கள் மற்றும் புகார்களை 1800 425 6669 (கட்டணமில்லா அழைப்பு எண்), 04428271915 (தொலைநகல் எண்), itcontrol.chn@gov.in (மின்னஞ்சல் முகவரி), 94453 94453 (வாட்ஸ்அப் எண்) ஆகிய வழிகளில் அனுப்பலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**India**

2.The Union Cabinet, chaired by the Prime Minister, Narendra Modi has approved of the signing of Memorandum of Understanding (MoU) between India and French Republic in the field of renewable energy cooperation. The MoU was signed in January 2021.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஒத்துழைப்புத் துறையில் இந்தியாவிற்கும் பிரெஞ்சு குடியரசிற்கும் இடையில் ஜனவரி, 2021 இல் கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பிரதமர் தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

3.The Union Cabinet, chaired by Prime Minister Narendra Modi, approved the signing of a Memorandum of Understanding (MoU) between the Ministry of Agriculture of Indian government and Ministry of Agriculture of the Republic of Fiji for co-operation in the field of agriculture and allied sectors.

வேளாண் துறையில் ஒத்துழைப்புக்காக இந்திய வேளாண் அமைச்சகத்திற்கும் ஃபிஜி நாட்டின் வேளாண் அமைச்சகத்திற்கும் இடையே கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

4.India and Norway have agreed to jointly work in the area of marine spatial planning in the oceanic space for the next five years. The initiative known as Marine Spatial Planning will be implemented by the Ministry of Earth Sciences through the National Centre for Coastal Research for India. This is a part of the Indo-Norway Integrated Ocean Initiative under the Memorandum of Understanding signed between the two countries in 2019. Lakshadweep and Puducherry have been identified as pilot sites for the project.

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு கடல்சார் இடங்கள் திட்டமிடல் குறித்து கூட்டாக வேலை செய்ய இந்தியாவும் நார்வேவும் ஒப்புக் கொண்டுள்ளன. ‘கடல் இடஞ்சார்ந்த திட்டமிடல்’ எனப்படும் இந்த முயற்சி பூமி அறிவியல் அமைச்சகத்தால் தேசிய கடலோர ஆராய்ச்சி மையம் மூலம் செயல்படுத்தப்படவுள்ளது. இது 2019 ஆம் ஆண்டில் இரு நாடுகளுக்கிடையில் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் ‘இந்தோ-நோர்வே ஒருங்கிணைந்த பெருங்கடல் முன்முயற்சி’யின் ஒரு பகுதியாகும். இந்த திட்டத்திற்கான சோதனை தளங்களாக லட்சத்தீவு மற்றும் புதுச்சேரி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

**International**

5.World Wildlife Day is observed every year on March 3. The day is being celebrated in 2021 under the Theme – ‘Forests and Livelihoods: Sustaining People and Planet.’

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 3 அன்று உலக வனவிலங்கு தினம் அனுசரிக்கப்படுகிறது. ‘காடுகள் மற்றும் வாழ்வாதாரங்கள்: மக்களையும் கிரகத்தையும் நிலைநிறுத்துதல்’ என்ற மையப்பொருளின் கீழ் 2021 ஆம் ஆண்டில் இந்த தினம் கொண்டாடப்படுகிறது.

6.World Hearing Day is held on 3 March each year to raise awareness on how to prevent deafness and hearing loss and promote ear and hearing care across the world.

காது மற்றும் செவிப்புலன் பராமரிப்பை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 3 ஆம் தேதி உலக செவிப்புலன் தினம் அனுசரிக்கப்படுகிறது.

---

# MARCH-03

1.The Tamil Nadu Chief Electoral Officer Satyabrata Sahoo on March 1 held a meeting to discuss the model code of conduct with the representatives of recognized political parties at the Secretariat, ahead of the Assembly election.

தமிழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடன் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு மார்ச் 1 அன்று ஆலோசனை நடத்தினார். சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் தேர்தல் விதிமுறைகள் தொடர்பாக ஆலோசனை நடத்தினார்.

## India

2.The Prime Minister Shri Narendra Modi on March 2 inaugurated ‘Maritime India Summit 2021’ through video conferencing.

பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் மார்ச் 2 ம் தேதி காணொளி காட்சி மூலம் ‘கடல்சார் இந்தியா உச்சி மாநாடு 2021’ ஐ திறந்து வைத்தார்.

3.The Udaipur Science Centre, at Udaipur, Tripura was dedicated to the people by the Governor of Tripura, Shri Ramesh Bais on 28th February 2021.

திரிபுரா மாநிலம் உதய்பூரில் உதய்பூர் அறிவியல் மையத்தை பிப்ரவரி 28 அன்று அம்மாநிலத்தின் ஆளுநர் ஸ்ரமேஷ் பைஸால் அவர்கள் திறந்து வைத்தார்.

4.The Tribal Cooperative Marketing Development Federation Ltd (TRIFED), Ministry of Tribal Affairs, Government of India is organizing "GI Mahotsav" in collaboration with Lal Bahadur Shastri National Academy of Administration (LBSNAA), Mussoorie and Ministry of Culture, Government of India on 4th and 5th March 2021.

பழங்குடியினர் கூட்டுறவு சந்தைப்படுத்தல் மேம்பாட்டு கூட்டமைப்பு லிமிடெட் (TRIFED), லால் பகதூர் சாஸ்திரி தேசிய நிர்வாக அகாடமி (LBSNAA) மற்றும் கலாச்சார அமைச்சகம் ஆகியவை இணைந்து மார்ச் 4 மற்றும் 5 ஆம் தேதிகளில் "புவியியல் அறிகுறி திருவிழா" என்கிற நிகழ்வை நடத்த ஏற்பாடு செய்கின்றன.

5.The Union Minister for Social Justice and Empowerment Shri Thaawarchand Gehlot virtually launched "Sugamya Bharat App" and a handbook entitled "Access – The Photo Digest" through video conference in New Delhi.

மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் தாவர்சந்த் கெஹ்லோத் அவர்கள் காணொளி காட்சி மூலம் "சுகமிய பாரத்" என்னும் மொபைல் செயலி மற்றும் "அணுகல் – புகைப்பட டைஜஸ்ட்" என்ற கையேட்டை வெளியிட்டார்.

6.The Parliament of India has merged two of the TV channels namely, Lok Sabha TV and Rajya Sabha TV into an integrated channel "Sansad TV". The retired IAS officer Ravi Kapoor has been appointed as the CEO of the Sansad TV for 1 year.

ராஜ்யசபா டிவி, லோக்சபா டிவி ஒன்றாக இணைக்கப்பட்டு சன்சத் (நாடாளுமன்றம்) டிவி என்று பெயரிடப்பட்டுள்ளது. ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி ரவிகபூர் சன்சத் டிவி-யின் சி.இ.ஓ.வாக ஓராண்டுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

## International

7.Sri Lanka on March 2 said it will develop the West Container Terminal (WCT) at the Colombo Port along with India and Japan, in a near-360 degree policy turn from a month ago, when the two partners were ejected from a 2019 tripartite agreement to jointly develop the East Container Terminal (ECT), amid port unions' resistance to "foreign involvement".

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தை, இந்தியாவின் அதானி நிறுவனம், ஜப்பான் முதலீட்டாளர், ஜோன் கீல்ஸ் நிறுவனம் மற்றும் இலங்கை துறைமுக அதிகார சபை ஆகியன இணைந்து முன்னெடுப்பதற்கு இலங்கை அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. கொழும்பு துறைமுகத்தின் தெற்கு முனையத்தின் ஒரு பகுதி ஏற்கனவே சீனாவிற்கு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

8.The U.S. administration announced sanctions of Russian officials and businesses on March 3 related to the poisoning and jailing of opposition leader Alexei Navalny.

ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவால்னிக்கு விஷம் வைத்தது தொடர்பாக அந்நாட்டின் மீது பொருளாதாரத் தடை விதித்துள்ளது அமெரிக்கா. ஜோ பைடன் நிர்வாகம், ரஷ்யா மீது விதிக்கும் முதல் பொருளாதாரத் தடை இதுவாகும்.

---

# MARCH-02

1.The Cotton farmers in the Perambalur-Ariyalur belt are able to see higher productivity through the cultivation of CO17 variety released by the Tamil Nadu Agricultural University.

பெரம்பலூர்-அரியலூர் பகுதியில் உள்ள பருத்தி விவசாயிகள் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்ட CO17 பருத்தி வகையை பயிரிடுவதன் மூலம் அதிக உற்பத்தித்திறனைப் பெறுகிறார்கள்.

2.The Bureau of Pharma PSUs of India (BPPI), the implementing agency of Pradhan Mantri Bhartiya Janaushadhi Pariyojana (PMBJP) is celebrating 3rd Janaushadhi Diwas on 7th March 2021 with the theme of “Seva Bhi – Rozgar Bhi”.

பிரதான் மந்திரி பாரதிய ஜனவுஷாதி பரியோஜனா (PMBJP) திட்டத்தை செயல்படுத்தும் நிறுவனமான இந்திய மருந்து பொதுத்துறை நிறுவனங்களின் பணியகம் (BPPI) மார்ச் 7, 2021 ஆம் தேதி “சேவா பீ – ரோஸ்கர் பீ” என்ற மையப்பொருளில் 3 வது ஜனவுஷாதி தினத்தைக் கொண்டாடுகிறது.

3.The third and final edition of the Rashtriya Sanskriti Mahotsav-2021 concluded with colorful cultural programs. The two-day Mahotsav was organized by the Ministry of Culture, Government of India from 27th – 28th February 2021 at Murshidabad, West Bengal.

ராஷ்டிரிய சமஸ்கிருத மஹோத்ஸவ் -2021 இன் மூன்றாவது மற்றும் இறுதி பதிப்பு வண்ணமயமான கலாச்சார நிகழ்ச்சிகளுடன் நிறைவு பெற்றது. மேற்கு வங்காள மாநிலம் முர்ஷிதாபாத்தில் பிப்ரவரி 27 முதல் 28 வரை இந்திய அரசின் கலாச்சார அமைச்சகத்தால் இரண்டு நாள் மஹோத்ஸவ் நடத்தப்பட்டது.

4.The 45th Civil Accounts Day was celebrated on March 1, 2021.

45 வது சிவில் கணக்கு தினம் மார்ச் 1, 2021 அன்று கொண்டாடப்பட்டது.

5.The Union Minister Dr. Harsh Vardhan inaugurated the second edition of Global Bio-India-2021 in New Delhi through virtual mode. The three-day event is being held from 1st to 3rd March 2021 has been organized on a digital platform. The theme for this year is “Transforming lives” with the tagline “Biosciences to Bio-economy”.

குளோபல் பயோ இந்தியா -2021 இன் இரண்டாம் பதிப்பை புது தில்லியில் இணைய வழியில் மத்திய அமைச்சர் டாக்டர் ஹர்ஷ் வர்தன் திறந்து வைத்தார். மூன்று நாள் நிகழ்வு மார்ச் 1 முதல் 3 வரை இணைய வழியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டிற்கான மையப்பொருள் “உயிர் பொருளாதாரத்திற்கு உயிர் அறிவியல்” ஆகும். இந்த ஆண்டிற்கான கோஷம் “வாழ்க்கையை மாற்றுவது” ஆகும்.

6.The National Science Day 2021 (February 28) was celebrated in Defence Research & Development Organisation, DRDO Head Quarter in New Delhi on 1st March 2021 with great fervour.

மார்ச் 1, 2021 ஆம் தேதி புதுதில்லியில் உள்ள பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு தலைமையகத்தில் 2021 ஆம் ஆண்டு தேசிய அறிவியல் தினம் (பிப்ரவரி 28) கொண்டாடப்பட்டது.

7.Russia launched its space satellite Arktika-M on a mission to monitor the climate and environment in the Arctic.

ஆர்டிக் கண்டத்தில் நிகழும் காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் மாற்றத்தை கண்காணிக்க ரஷ்ய விண்வெளித் துறை ஆர்க்டிகா-எம் என்ற செயற்கைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தி உள்ளது.

---

# MARCH-01

1.The Tamil Nadu Special Reservation of seats in Educational Institutions including Private Educational Institutions and of appointment or posts in the services under the State with the reservation for Most Backward Classes and Denotified Communities Act, 2021 shortly called as the Special Reservation Act of 2021, has received the assent of Governor Banwarilal Purohit on February 26. The gazette notification was also issued on the same day. The law has divided MBCs into 3 groups – the Most Backward Class of the Vanniakula Kshatriyas will get 10.5%, the Most Backward Classes and Denotified Communities 7% and the Most Backward Classes 2.5%.

சட்டப்பேரவையில் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்ட வன்னியர்களுக்கு 10.5% உள் ஒதுக்கீடு வழங்கும் சட்ட மசோதாவுக்குத் தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் பிப்ரவரி 26 அன்று ஒப்புதல் வழங்கியுள்ளார். மிக பிற்படுத்தப்பட்டோருக்கான 20% இடஒதுக்கீட்டில், ‘எம்பிசி-வி’ என்ற புதிய பிரிவு ஏற்படுத்தப்பட்டு, வன்னியர்களுக்கு 10.5% உள் ஒதுக்கீடு வழங்கும் வகையில் மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், மிக பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் உள்ள சீர்மரபினருக்கு 7% உள் ஒதுக்கீடு வழங்கவும் இந்த மசோதா வழிவகை செய்கிறது. 20% இடஒதுக்கீட்டில் மீதம் உள்ள 2.5% மிக பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் உள்ள மற்ற சமுதாயத்தினருக்கான இடஒதுக்கீடு ஆகும்.

2.The Indian Space Research Organisation (ISRO) on February 28 launched the primary satellite Amazonia-1 of Brazil and 18 co-passenger satellites onboard the Polar Satellite Launch Vehicle (PSLV-C51) from Satish Dhawan Space Centre (SDSC) Sriharikota Range (SHAR). PSLV-C51/Amazonia-1 is the first dedicated commercial mission of New Space India Limited (NSIL), a Government of India company under the Department of Space.

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து இன்று காலை 10.24 மணிக்கு பி.எஸ்.எல்.வி. சி-51 ராக்கெட், 19 செயற்கைக் கோள்களுடன் விண்ணில் செலுத்தப்பட்டது. இதில் பிரேசில் நாட்டில் அமேசான் காடுகள் அழிக்கப்படுவதை தடுக்கும்

நோக்கில் அவற்றை கண்காணிக்கவும் விவசாயம் சார்ந்த புவிசார் ஆய்வுக்காகவும் ‘அமேசோனியா – 1’ செயற்கைக் கோள் ஏவப்பட்டுள்ளது. இது இஸ்ரோவின் வர்த்தகப் பிரிவான நியூ ஸ்பேஸ் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் (NSIL) மூலம் வணிகரீதியாக செலுத்தப்பட்ட முதல் ராக்கெட் என்பது குறிப்பிடத்தக்கது.

3.‘The India Toy Fair-2021’is being held from February 27 to March 2 in a virtual mode.

‘இந்தியா பொம்மை கண்காட்சி – 2021’ பிப்ரவரி 27 முதல் மார்ச் 2 வரை இணைய வழியில் நடத்தப்படுகின்றது.

4.The Central government on February 28 extended the tenure of P.C. Mody, Chairman of Central Board of Direct Taxes (CBDT), for three months effective from March 1 till May 31.

மத்திய நேரடி வரி வாரியத்தின் (CBDT) தலைவராக இருக்கும் பி.சி.மோடி அவர்களின் பதவிக்காலத்தை மார்ச் 1 இல் இருந்து மே 31 ஆக மூன்று மாதங்களுக்கு மத்திய அரசு நீட்டித்துள்ளது.

5.The annual National Youth Adventure Programme, being organised by the Bharat Scouts and Guides (BS & G), New Delhi, will be conducted this year at Manali in Himachal Pradesh between March and June 2021. The programme will be for five days for each batch, consisting of 30 members only.

புதுடெல்லியின் பாரத் சாரணர்கள் மற்றும் சாரணியர்கள் (BS & G) ஏற்பாடு செய்யும் வருடாந்திர தேசிய இளைஞர் சாகச திட்டம் இந்த ஆண்டு (2021) மார்ச் முதல் ஜூன் வரை இமாச்சல பிரதேச மாநிலம் மணாலியில் நடத்தப்படவுள்ளது.

6.Rare Disease Day is observed every year on the last day of February to spread awareness about rare diseases. This year, it is observed on February 28.

அரிய நோய்கள் குறித்த விழிப்புணர்வை பரப்புவதற்காக ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி கடைசி நாளில் அரிய நோய் தினம் அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டு, அரிய நோய் தினம் பிப்ரவரி 28 அன்று அனுசரிக்கப்படுகிறது.

7.The Union Minister for Finance and Corporate Affairs Nirmala Sitharaman virtually participated in the first G20 Finance Ministers and Central Bank Governors (FMCBG) meeting under the Italian Presidency on February 26.

பிப்ரவரி 26 அன்று இத்தாலி தலைமையின் கீழ் நடைபெற்ற முதல் ஜி 20 நிதி அமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் (FMCBG) கூட்டத்தில் மத்திய நிதி மற்றும் கார்ப்பரேட் விவகாரங்கள் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் இணைய வழியில் பங்கேற்றார்.

8.Sri Lanka is “Priority One” partner for India in the defence sphere, the Indian High Commission in Colombo said in a statement on Feb. 28. India participated in the 70th anniversary celebration of the Sri Lanka Air Force (SLAF).

பாதுகாப்புத் துறையில் இந்தியாவுக்கு இலங்கை “முதல் முன்னுரிமை” நாடு என்று கொழும்பில் உள்ள இந்திய உயர் தூதர் அலுவலகம் பிப்ரவரி 28 ம் தேதி வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது. இலங்கை விமானப்படையின் 70 வது ஆண்டு விழாவில் இந்தியா பங்கேற்றது குறிப்பிடத்தக்கது.